**05.03.2021**

**அ.வ.எண்.**249/2012

**<u>குறுக்கு விசாரணை வா.சா.1</u>**

எனது நிரந்தர குடியிருப்பு சிறுநாகலூர். மாரி என்பவர் எனது கொள்ளு தாத்தா ஆகும். எனது தாத்தா கொள்ளு தாத்தா இறந்து சுமார் எவ்வளவு காலம் இருக்கும் என்றால் சுமார் 1930 அல்லது 1932ம் ஆண்டு இருக்கும். எனது கொள்ளு தாத்தா மாரி என்பவருக்கு எத்தனை நபர்கள் வாரிசு என்ற விவரம் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆதிமூலம் என்பவர் யார் என்றால் எனது தாத்தா ஆகும். ஆதிமூலம் உடன் பிறந்தவர்கள் எத்தனை நபர்கள் என்றால் எனக்கு கணக்கு தெரியவில்லை. ஆனால் உடன் பிறந்தவர்கள் உள்ளார்கள். மாரி என்பவருக்கு சொந்தமான சொத்தின் மீது ஆதிமூலம் மற்றும் அவர் உடன் பிறந்தவர்களுக்கு பங்கு உள்ளது என்றால் சரிதான். ஆதிமூலம் உடன் பிறந்த நபர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அவர்களது பெயர் தெரியாததால் பெயர் சேர்க்கவில்லை. ஆதிமூலம் உடன்பிறந்தவர்கள் பற்றிய விவரத்தினை இந்த வழக்கில் குறிப்பிடவே இல்லை என்றால் சரிதான். வழக்கு தாவா சொத்திற்கு யூ.டி.ஆர் திட்டத்தின் கீழ் எனது குடும்பத்தாருக்கு பட்டா கொடுக்கவில்லை என்றால்

சரிதான். நாயுடு பெயரில் பட்டா கொடுக்கபட்டுள்ளது. 1983ம் ஆண்டு யூ.டி.ஆர் திட்டத்தின் கீழ் லோகய்யா நாயுடு பெயரில் தாவா சொத்திற்கு கொடுக்கபட்ட பட்டாவினை நான் ஒரு காலத்திலும் ஆட்சேபணை செய்யவில்லை என்றால் எனக்கு படிப்பறிவு இல்லாத காரணத்தினால் நான் ஆட்சேபணை செய்யவில்லை. லோகய்யா நாயுடு பெயரில் தாவா சொத்திற்கு 1983ம் ஆண்டு பட்டா கொடுத்த சமயத்திலேயே எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 2001ம் வருடம் குப்பன் என்பவர் தாவா சொத்தில் முள்வெட்டி போட்டபடியால் அப்போது தான் எனக்கு தெரியும். சர்வே எண் 46/7க்கு உட்பட்ட சொத்தினை 46/7ஏ முதல் 46/7எப் வரை உட்பிரிவுகள் செய்யபட்டுள்ளது என்றால் 5 நபர்களுக்கு பிரித்து கொடுக்கபட்டு ஒரு பொது கிணறு உள்ளது. அவ்வாறு உட்பிரிவு செய்யபட்ட விவரத்தினை நான் இவ்வழக்கில் கூறவில்லை என்றால் என் வழக்கறிஞரிடம் கூறி உள்ளேன். அவர் வழக்கில் குறிப்பிடவில்லை. சர்வே எண் 46/7ஏ சொத்திற்கு குப்பன் என்பவர் பெயரில் பட்டா கொடுக்கபட்டுள்ளது என்றால் சரியல்ல. தனபால் என்பவர் பெயரில் கொடுக்கபட்டுள்ளது. குப்பன் என்பவருக்கு தனபால் என்னமுறை என்றால் பெரியப்பா ஆகும். தனபாலின் மற்றொரு சகோதரர் வீரராகவனின் மகன் காளிதாஸ் என்றால் சரிதான். காளிதாஸை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால்

அது பற்றி எனக்கு தெரியவில்லை. எனது வழக்கறிஞர் திரு. பாளையத்தான் என்பவருக்கு வழக்கு விவரங்களை யார் கூறினார்கள் என்றால் நான் தான் கூறினேன். சர்வே எண் 46/7பி சொத்திற்கு பஞ்சப்பன் பெயரில் பட்டா கொடுக்கபட்டுள்ளது என்றால் சரிதான். கிராமநத்தம் என்று கொடுக்கபட்டுள்ளது. சர்வே எண் 46/7சி சொத்திற்கு கிருஷ்ணன் பெயரில் பட்டா கொடுக்கபட்டுள்ளது என்றால் சரிதான். கொடுத்த விவரம் எனக்கு தெரியாது. கிருஷ்ணன் என்பவர் சர்வே எண் 46/7சி சொத்தினை 7.6.2010ம் தேதியில் கலைமணி என்பவருக்கு கிரயம் செய்து வைத்துள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. தற்போது பக்தவச்சலம் மகன் கலைமணி என்பவர் தான் சர்வே எண் 46/7சி க்கு உட்பட்ட சொத்தின் அனுபவத்தில் உள்ளார் என்றால் சரியல்ல. அந்த இடம் காலியாக தான் உள்ளது. சர்வே எண் 46/7பி சொத்திற்கு முனுசாமி என்பவர் பெயரில் பட்டா கொடுக்கபட்டுள்ளது என்றால் கிராம நத்தம் என்று கொடுக்கபட்டுள்ளது. முனுசாமி என்பவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். முனுசாமி என்பவருக்கு ராமதாஸ், மூர்த்தி, பார்வதி, திலகம் ஆகியோர் பிள்ளைகள் ஆகும் என்றால் சரிதான். அந்த 4 நபர்களையும் இவ்வழக்கில் நான் தரப்பினாராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். சர்வே எண் 46/7இ சொத்து அமிர்தம்மாள் பெயரில் பட்டா கொடுக்கபட்டுள்ளது

என்றால் அதை பற்றி எனக்கு தெரியவில்லை. அமிர்தம்மாள் இறந்துவிட்டார் என்றால் இருக்கலாம். அமிர்தம்மாளுக்கு இரண்டு மகள்கள் சரோஜா,சந்திரா என்றால் சரிதான். சரோஜா மற்றும் சந்திரா தான் சர்வே எண் 46/7இக்கு உட்பட்ட சொத்தினை அனுபவித்து வருகின்றார்கள் என்றால் அந்த இடம் காலியாக தான் உள்ளது. சர்வே எண் 46/7எப்க்கு தென் கிழக்கு மூலை சொத்து கிராமத்து குடிநீர் பொது கிணறு என்றால் சரிதான். அந்த கிணறு கிராமமக்களுக்காக குடிநீருக்காக 1960ம் ஆண்டு எடுக்கபட்டது என்றால் சரிதான். அந்த கிணறு எடுத்த சமயத்தில் நானும் எனது மூதாதையர்களும் எந்தவிதமான ஆட்சேபணையும் செய்யவில்லை என்றால் சரிதான். ராமதாஸ் என்பவர் சர்வே எண் 46/7டிக்கு உட்பட்ட சொத்தில் ஓட்டு வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். 2000 வருடத்தில் அவர் ஓட்டு வீடு கட்டி வசித்து வருகிறார். நான் தாவா சொத்திற்கு அருகில் எங்கு குடியிருக்கின்றேன் என்றால் சர்வே எண் 46/6க்கு உட்பட்ட சொத்தில் நான் குடியிருக்கின்றேன். கிராம நத்தம் சர்வேயில் நான் குடியிருக்கும் இடத்திற்கு எனது பெயரில் பட்டா கொடுக்கபட்டுள்ளதா என்றால் கொடுக்கபட்டுள்ளது. எங்களது கிராமத்தில் கிராம நத்தம் பட்டா கொடுக்கபட்ட சமயத்தில் யார் யார் நிலத்தில் குடியிருக்கின்றார்களோ அவர்களது பெயரில் பட்டா கொடுக்கபட்டது என்றால்

சரிதான். ஆனால் தாவா சொத்து புஞ்சை நிலத்திற்கு தவறுதலாக கிராம நத்தம் பட்டா கொடுக்கபட்டுள்ளது. சர்வே எண் 46/6க்கு உட்பட்ட சொத்து கிராம நத்தம் பட்டா கொடுப்பதற்கு முன்பு புஞ்சை நிலம் என்றால் சரிதான். ஆகையால் எனது கிராமத்தில் புஞ்சை நிலத்தினை வீட்டுமனைகளாக பயன் படுத்தி வந்த நபர்களுக்கு கிராம நத்தம் பட்டா வழங்கபட்டது என்றால் சரிதான். 1992ம் ஆண்டு தாவா சொத்தினை கிராம நத்தம் பட்டாக்களாக பிரித்து கொடுக்கபட்ட சமயத்தில் நானும் எனது பங்காளிகளும் எந்த விதமான ஆட்சேபணையும் செய்யவில்லை என்றால் அப்போது எங்களுக்கு அந்த விவரம் தெரியாது. எனக்கு எப்போது அந்த விவரம் தெரியும் என்றால் 2001ம் ஆண்டு ஆகும். 2001ம் ஆண்டு பட்டாவை பற்றி தெரிந்த பின்பு 2012ம் ஆண்டு வழக்கு தொடரும் வரை நான் கொடுக்கபட்ட பட்டா மீது எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. விசாரணை கமிஷன் முன்பு மனு கொடுத்தேன். அதன்படி விசாரணை நடந்தது. ஆர்.டி.ஓ அலுவலகத்தில் கடிதம் கொடுத்தார்கள். அதன் அடிப்படையில் நான் வழக்கு தொடர்ந்துள்ளேன். அந்த கடிதத்தினை ஆர்.டி.ஒ அலுவலகத்தில் கொடுக்காமல் இந்த வழக்கு தொடரப்பட்டுள்ளது. வழக்கு தாவா சொத்தினை எந்த காலத்திலும் நானும் மாரியும் அனுபவித்தது கிடையாது என்றால் சரியல்ல. அந்த

வழியில் தான் நாங்கள் சென்று வருகின்றோம். இவ்வழக்கில் பிரதிவாதிகள் மற்றும் சேர்க்கபடாத பட்டா வழங்கபட்ட நபர்கள் தான் அவர்களுக்கு சொந்தமான சொத்தில் வசித்து வருகின்றார்கள் என்றால் ஒரு உட்பிரிவில் மட்டும் தான் வீடுகட்டபட்டுள்ளது. மற்ற இடம் காலியாக உள்ளது. கிராம நத்தம் பட்டா கொடுக்கபட்டதால் தான் நான் இவ்வழக்கினை தொடர்ந்துள்ளேன். அவர் அவர்களுக்கு வழங்கபட்ட பட்டாவின் அடிப்படையில் பட்டா வழங்கபட்ட நபர்கள் அவர்களது சொத்தினை செலவு செய்து மேம்பாடு செய்து வைத்துள்ளார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. ராமதாஸ் கட்டி உள்ள வீட்டின் மதிப்பு எவ்வளவு இருக்கும் என்றால் சுமார் 35 ஆயிரம் இருக்கும். தாவா சொத்து தற்போது வீட்டு மனைகளாக உள்ளது. சுற்றிலும் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். ஆகையபடியால் தாவா சொத்தினை வீட்டு மனை அளவிட்டு மதிப்பீடு செய்து இவ்வழக்கினை தாக்கல் செய்திருக்கவேண்டும் என்றால் நான் கடிதத்தை என் வழக்கறிஞரிடம் கொடுத்தேன். அவர் தான் வழக்கு தாக்கல் செய்தார். சரியாக தாவா சொத்தினை மதிப்பீடு செய்திருந்தால் அதிகமான நீதிமன்ற கட்டணம் செலுத்தி இருக்கவேண்டும் என்றால் அதை பற்றி எனக்கு தெரியவில்லை. சரியான மதிப்பீடு செய்திருந்தால் உரிய நீதிமன்றத்தில் தான் இவ்வழக்கினை தாக்கல்

செய்திருக்கவேண்டும் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. இந்த நீதிமன்றத்தில் இந்த வழக்கு வரம்பு எல்லைக்கு உட்பட்டது இல்லை என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து எந்த காலத்திலும் எனது அனுபவத்தில் மற்றும் சுவாதீனத்தில் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து வழியாக தான் சென்று வருகின்றோம். தாவா உரிய தரப்பினர்களை சேர்க்காத தோஷத்தால் பாதிக்கபட்டுள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. உட்பிரிவு செய்யபட்ட விவரம் தெரிந்து கொண்டே சரியான சொத்து விவரத்தை கொண்டு இவ்வழக்கினை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1983 வரை நான் வரி செலுத்தி வந்தேன். வழக்கு தாவா சொத்து விவரத்தில் ராமதாஸ் என்பவரது வீடை குறிப்பிடவில்லை என்றால் வழக்கில் தாக்கல் செய்த பிராது விவரங்கள் பற்றி எனக்கு தெரியவில்லை. நான் எனது வழக்கறிஞரிடம் கூறினேன். வா.சா.ஆ.1 எஸ்.எல்.ஆர் நகலில் கிராம நத்தம் இடத்திற்கு 50 கஜத்திற்கு அருகில் அமைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சரியாக சங்கதிகளை கொண்டு இவ்வழக்கு தாக்கல் செய்யபடாததாலும் தாவா சொத்தின் மீது எனக்கு எந்தவிதமான உரிமையும் இல்லாததாலும் இவ்வழக்கு தள்ளுபடி செய்யபடவேண்டும் என்றால் சரியல்ல.